# பூஞ்சிட்டுக்கள்



சிறுவர் கதைகள்

ச. அருளானந்தம்

# பூஞ்சிட்டுக்கள்

## சிறுவர் கதைகள்

ச. அருளானந்தம்

நூலின் பெயர் : பூஞ்சிட்டுக்கள்

விடயம் : சிறுவர் இலக்கியம்

ஆசிரியர் : ச. அருளானந்தம்

உரிமை : ஆசிரியருக்கு

படங்கள் : ச.அ. அருள்பாஸ்கரன்

வெளியீடு : அருள் வெளியீடு
37/7, மத்திய வீதி
உவர்மலை, திருகோணமலை.

முதற்பதிப்பு : 27.08.97

பதிப்பகம் : வீஆர்ஜிகே, கொழும்பு 13
தொலைபேசி : 347903, பக்ஸ் : 074 612934

பக்கம் : 24

விலை : 35/= ரூபா

## படையல்

ஆலங்கேணி ஊரில் கல்விப் பயிர் வளர
உரமிட்டு உழைத்த தலைமை ஆசான் நெல்லியடி
திரு.சி.சின்னத்தம்பி அவர்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம்

ஆசிரியர்

# அணிந்துரை

இது ஒரு சிறுவர் கதைத் தொகுப்பு. இதில் ஐந்து கதைகள் உண்டு. இதை எழுதியவர் நண்பர் ச.அருளானந்தம் அவர்கள். அவர் இப்பொழுது வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி, கலாச்சார விளையாட்டுத்துறை அமைச்சில் நிபுணத்துவ ஆலோசகராகக் கடமையாற்றுகின்றார். பாடசாலைக்கு முந்திய பாலர் கல்விக்குப் பொறுப்பாகவுள்ளார். அவர் குழந்தையுள்ளம் படைத்தவர். குழந்தைகட்காகவே பல புத்தகங்களை எழுதியுள்ளார். அவற்றில் இந்தச் சிறுவர் கதைத் தொகுப்பு ஐந்தாவது நூல் என்று நினைக்கிறேன். சிறுவர்கட்கு உகந்தவை. இயற்கையோடு ஒட்டிய கருக்களை மையமாகக் கொண்டவை. சிறுவர்கட்குப் படிக்கப் படிக்க உவகையூட்டும் வகையில் எழுதப்பட்டிருக்கின்றன. ஒரே பாத்திரங்கள், வெவ்வேறு சூழல்கள், இயற்கை, விஞ்ஞானம், மனத்தைரியம், மகிழ்ச்சி, வியப்பு என்னும் வேறுபட்ட பயனுள்ள கருத்துக்களைக் கொண்டு கதைகள் உருவாக்கப் பட்டிருக்கின்றன. மொத்தத்தில் இது ஒரு முழுமையான படைப்பு.

இக்கதைகளைப் படித்த பொழுது எனது இளமைக்கால நினைவுகள் மீண்டதொரு அனுபவம். பரவசம், ஆனந்தம். நான் பெற்ற இன்பம் மற்றவர்களும் இக்கதைகளைப் படித்துப் பெறவேண்டும் என்பது எனது அவா. சிறுவர்கள் தங்கள் வாசிப்புப் பழக்கத்தை வளர்க்கவும், மொழி வளத்தைப் பெருக்கவும், இக்கதைக் கொத்து பெரிதும் உதவும் என்பது எனது தீர்க்கமான நம்பிக்கை. இத்தகைய நூல்களை திரு.அருளானந்தம் அவர்கள் தொடர்ந்தும் எழுத வேண்டும். அதனால் எம் சிறுவர்கள் பயனடைய வேண்டும் என்பது எனது பிரார்த்தனை. பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் இவ்வகை நூல்களை மாணவர்களுக்கு அறிமுகம் செய்து அவர்களைப் படிக்கத் தூண்ட வேண்டும். பாடசாலை நூலகங்களில் இவற்றைப் பயன்படுத்த வேண்டும். வாங்கிப் படிக்கத் தூண்ட வேண்டும்.அவர்களை எழுதத் தூண்டவும் வேண்டும். மொழியாற்றல் இருப்பின் எல்லாப் பாடங்களிலும் ஆற்றல் உள்ளவர்களாக விளங்கலாம் என்பது உறுதி.

கல்வி உலகம் இவரது ஆக்கங்களுக்கு ஆதரவு நல்கும் என்பது எனது எண்ணமாகும்.

கனகசபை நடராஜா
நிபுணத்துவ ஆலோசகர்
கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு
திருக்கோணமலை.

## என்னுரை

சிறுவர் இலக்கியம் பல்கிப் பெருகவேண்டும் என்பது பல கல்விப் பெரியார்களது விருப்பமாகும். கல்வியின் ஆணிவேர் ஆரம்பக் கல்வி என்பர். "ஆரம்பக்கல்வி உறுதியான கட்டமைப்பைக் கொண்டதாக அமையவேண்டும். அதற்கு ஆர்வமூட்டும் வகையில் சிறுவர்களுக்கான உசாத்துணை நூல்கள் வெளிவர வேண்டும்.. அத்துடன் நல்ல பண்புகள் சிறுவர் உள்ளங்களில் உருவாக அவை வழி செய்ய வேண்டும்." என வடக்கு கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர். திரு. சுந்தரம் டிவகலாலா அவர்கள் கூறுவர்.

"சிறுவர்களுக்கு எளிதில் விளங்கக் கூடியதாக, சின்னச் சின்ன வசனங்கள், இலகுவான சொற்கள், மனதைக் கவர்ந்து ஈர்க்கக் கூடிய நடையில் நூல்கள் அமைய வேண்டும்." என கல்விமானும் இவ் அமைச்சின் முன்னைய செயலாளரும், இந்நாள் கல்வி நிபுணத்துவ ஆலோசகருமான திரு. ஈ.ஜே. சற்குணராஜா அவர்களது பெருவிருப்பாகும்.

இந்நூலைப் படித்து, ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்கி அணிந்துரை தந்திருப்பவர் பிரபல கல்விமானும், அதிபர், கல்விப் பணிப்பாளர், கிழக்குப் பல்கலைக்கழகப் பதிவாளர் என உயர்ந்து இன்று இவ்வமைச்சின் கல்வி நிபுணத்துவ ஆலோசகருமாக இருக்கும் திரு. கனகசபை நடராஜா அவர்களாவர்.

சிறுவர்கள் எனும்போது முன்பள்ளிப் பாலர்கள் தொட்டு க.பொ.த (சா/த) வகுப்பு மாணவர் வரை உள்ளடக்கப்படுவார்கள். அவர்களது வயது, இயல்பு, உள்வாங்கும் தன்மை, மொழி அறிவு, ஆற்றல் போன்றவற்றைக் கவனத்திற் கொண்டு எழுதப்பட வேண்டும். ஆகவே எனது சிறுவர்களுக்கான ஆக்கங்கள் இவற்றின் அடிப்படையிலேயே எழுதப்படுகின்றன.

ஆங்கில மொழியில் சிறுவர்களுக்கான நூல்கள் ஏராளம் உண்டு. சிங்கள மொழியிலும் நிறைய உண்டு. ஆனால் தமிழ் மொழியில் மிகக் குறைவு. சிறுவர்களுக்காக ஆக்க இலக்கியம் படைப்பவர்களை ஊக்குவிக்க வேண்டும். பாடசாலைகளில் மாணவர்களுக்கு இவற்றை அறிமுகம் செய்து, வாங்கிப் படிக்கத் தூண்ட வேண்டும். வாசிக்கும் பழக்கத்தை மாணவரிடையே வளர்க்க வேண்டியது அதிபர், ஆசிரியர்களது கடமையாகும்.

எனது ஆக்கங்களுக்கு ஆதரவளிக்கும் ஆசிரிய சமுகத்திற்கும், மாணவ உலகிற்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன். இந்நூலை எழுதத் தூண்டிய அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் அனைவருக்கும் மனமுவந்த நன்றிகள். மனங்கோணாது தட்டச்சு செய்து தரும் செல்வி. சித்திரா ஜெகதீசன், திருமதி நிர்மலா ஜெகதேவன், உயிரோட்டமான ஓவியங்களை வரைந்து, நூலாக்கப் பொறுப்பை ஏற்றுச் செய்யும் எனது மகன் ச.அ.அருள்பாஸ்கரன், அழகாக அச்சிட்டுத் தரும் வீஆர்ஜிகே பிறின்டர்ஸ் அனைவருக்கும் எனது நன்றிகள்.

ச.அருளானந்தம்

ஆலங்கேணி
கிண்ணியா.

## உள்ளே......


- பூஞ்சிட்டுக்கள்
- தம்பியும் சைக்கிளும்
- விண்கலம் செய்வோம்
- எங்கள் ஊஞ்சல்
- கீரியும் பாம்பும்

# பூஞ்சிட்டுக்கள்

ரதீபன் தன் தம்பி நிருசனோடும், தங்கை நிமேசிக்காவோடும் ஊஞ்ச லாடிக் கொண்டிருந்தான். சற்றுத தொலைவில் கிணறு இருந்தது. குளிக்குப் நீா் பயிா்களுக்குப் பாயும் படி அப்பா வழி செய்திருந்தாா். பூஞ்செடிகள் பூத்துக் குலுங்கின. வண்ண, வண்ண ரோஜாக்கள், பல நிறத்தில் செவ்வ

ரத்தை, கொடி மல்லிகை, நித்திய கல்யாணி, கனகாம்பரம் என எங்கும் பூஞ்செடிகள். இடையிடையே கனிதருமரங்கள்.

மாதுளை பூவும், பிஞ்சும், காயுமாய் பாா்க்க அழகாக இருந்தது. செக்கச் செவேரென மாதுளம் பூக்கள் மலா்ந்திருந்தன. மாங்காய்கள் குலை குலையாய் தொங்கின. தென்னைகளில் இளநீரும், தேங்காய்களு மாய்க் காட்சியளித்தன. அணில்கள் சத்தமிட்டு ஓடித்திரிந்தன. வீட்டுத் தோட்டம் பயிா்களைக் கொண்டிருந்தது.

ஒரு சோடிப் பூஞ்சிட்டுக் குருவிகள் "வீச் வீச்" எனச் சத்தமிட்டு மாதுளையில் வந்திருந்தன. ரதீபனின் கண்கள் பிரகாசித்தன. அவற்றின் செயற்பாடுகளை உன்னிப்பாக அவதானித்தான். சற்று நேரத்தின் பின் அவை பறந்துவிட்டன. "அவை மீண்டும் வரமாட்டாவோ" என்று அவன் மனம் ஏங்கியது.



அம்மா அடுக்களையில சமை யலில் ஈடுபட்டிருந்தாா். அப்பா தோ ட்டப்பயிா்களுக்கு நீா் பாயும் வழி யைத் துப்பரவு செய்து கொண் டிருந்தாா். ரதீபன் அப்பாவிடம் சென் றான். அவன் கையில் குறிப்புக் கொப்பி இருந்தது. அவன் நட்ட அவரை விதைகள் நிலத்தைப்

பிளந்து வானத்தைப் பார்க்க நிமிர்ந்திருந்தன. வேர் நிலத்தினுள் இருந்தது, அவரை விதையின் மூடி தலையாகத் தெரிந்தது. நிலத்தில் இருந்து கறுத்தத் தலையோடு பாம்பு எட்டிப் பார்ப்பது போல இருந்தது. குறிப்புக் கொப்பியில் படத்தையும் வரைந்து, குறிப்பையும் எழுதிக் கொண்டான். நிலத்தைப் பண்படுத்தியதிலிருந்து இன்றுவரை குறிப்புக் கொப்பியில் தெரிந்தது. அப்பா எட்டிக் கொப்பியைப் பார்த்துக்கொண்டார். "அண்ணா... ஓடி வா... பூஞ்சிட்டுக்கள் மாதுளையில் வந்திருக்கின்றன." என நிரூஷன் அழைத்தான். "சத்தம் போட்டுக் கலைத்து விடாதே... இதோ வாறேன்" என்று விரைந்து ஓடி வந்தான் ரதீபன். நிமேசிக்கா பூஞ்சிட்டுக்களைப் பார்த்து குதூகலித்து "அண்ணா சிட்டுக்களின் சொண்டில் புல் இருக்கிறது" என்றாள். "சத்தம் போடாதீர்கள்... சிட்டுக்கள் மாதுளையில் கூடு கட்டப் போகுதுகள்" என்றான் ரதீபன்.

சிட்டுக்கள் மாதுளைக்கு வருவதும் போவதுமாயிருந்தன. குருவிகள் பறந்து சென்றதும் மூவருமாக மாதுளைப் பக்கம் சென்று பார்த்தனர். வசதியான கிளையில் இலைகளைச் சேர்த்து, அலகுகளால் பின்னி மழைநீர், வெய்யில், உட்புகாவண்ணம் கட்டியிருந்தன.

"அண்ணா, அழகான கூடு அம்மாவுக்கும் காட்டுவோமா"? நிமேசிக்கா சொன்னாள். "சரி காட்டுவோம். கூப்பிடு, நிரூஸ்! அப்பாவையும் கூப்பிடு" என்றான் ரதீபன். பிள்ளைகளது குரலுக்கு அப்பாவும், அம்மாவும் வந்தனர்.

ரதீபன் சிட்டுக்களின் செயலைக் காட்டினான். அவை கூடு கட்டும் முறையை பெருமையாக விளக்கினான். ஒன்றும் தெரியாதவர்கள் போல் கவனமாக அப்பாவும், அம்மாவும் கேட்டுக் கொண்டிருந்தனர். குருவிகள் இவர்களைக் கவனிக்கவில்லை. அவை கூடுகட்டிக் கொண்டிருந்தன.

கூடு கட்டி முடிவதற்கு மூன்று நாடகள் சென்றன. மூவரும் வந்து கூடு கட்டுவதைப் பார்ப்பதும், செல்வதுமாக இருந்தனர். நான்காம் நாள் பாடசாலை விட்டு வந்ததும் நிருஷன் நேரே மாதுளைப் பக்கம் போனான். "அண்ணா, அண்ணா... ஓடி வா..." என்றான். "என்ன!" என்று கேட்ட வாறு ரதீபனும், தங்கை நிமேசிக்காவும் ஓடி வந்தனர். "கூட்டுக்குள் எட்டிப்பார்"

என்றான் நிருசன். எட்டிப் பார்த்த ரதீபனின் கண்கள் விரிந்தன... "வாவ்... முட்டை..." கூறிக் கொண்டு அப்பாவிடம் ஓடினான். சிட்டுக்கள் முட்டை இட்டிருப்பதைக் கூறினான். முட்டைகளைத் தொட்டுப் பார்க்க ஆசையாக இருந்தது. ஒவ்வொரு நாளும் குருவிக் கூட்டைப்பார்ப்பதும், அது பற்றிக் கதைப்பதுமாய் நாட்கள் நகர்ந்தன.



கூட்டுக்குள் மூன்று முட்டைகள் இருந்தன. குருவிகள் அடை காத்தன. முட்டைகளைத் தொட்டால், குருவிகள் வேறு இடம் போய்விடும் என்று அப்பா சொல்லி இருந்தார். ஆளுக்காள் தெரியாமல் குருவிகள் இல்லாத நேரத்தில் முட்டைகளைக் கையில் எடுத்துப் பார்த்துக் கொண்டனர்.

"சின்னச் சின்ன முட்டை
சிட்டுக் குருவி முட்டை"

என நிருசன் பாடத் தொடங்கினான். பக்கத்தில் அவர்கள் வளர்க்கும் தாரா 'குவாக்... குவாக்' என்றபடி நடந்து வந்தது. பாட்டுக்கு எதிர்ப்பாட்டுப் போல் நிமேசிக்கா

"பென்னம் பெரிய முட்டை
பெரிய தாரா முட்டை"

எனப் பாடினாள். கேட்ட அம்மாவுக்குச் சந்தோஷம். ஓடோடி வந்து இருவரையும் வாரி அணைத்து முத்தமிட்டார். "அம்மா எனக்கில்லையா" என்று ரதீபன் கேட்டான். "உனக்கும் தான்" என்று மகனை அணைத்து முத்தமிட்டார். ரதீபன் தம்பியும், தங்கையும் பாடியதை அழகாக எழுதி வைத்தான்.

“கீச், கீச்” என்று குஞ்சுகள் சத்தமிட
டுவதை மூவரும் அவதானித்தனர். குஞ்சுக
அலகைத் திறந்தன. சிட்டுக்கள் குஞ்சுக
திணித்தன. அம்மா மூவருக்கும் உணவைக் கொ
ரதீபன் “அம்மா, கேளுங்கள்...........”

“குருவிக் குஞ்சுகள் மூன்று
பெரிய குருவிகள் இரண்டு
எல்லாம் சேர்த்து ஐந்து” என்றான்.

“சின்னப் பிள்ளைகள் மூன்று
அம்மா அப்பா இரண்டு
எல்லாம் சேர்த்து ஐந்து”

என்று நிரூசன் முடித்தான். அப்பா கைதட்டிக் கொண்டு வந்து அவர்களோடு சேர்ந்து கொண்டார்.

இப்போது குஞ்சுகள் கூட்டைவிட்டு வெளியே வந்தன. தாய்க்குருவி சிறகை விரித்துப் பறந்து காட்டியது. குஞ்சுகளும் சின்னச் சிறகுகளை விரித்துப் பறந்து திரிந்தன. “வாவ்” குஞ்சுகள் பறப்பதைப் பாருங்கள்” என்று நிமேசிக்கா துள்ளிக் குதித்தாள். பறந்த குஞ்சு ஒன்று ரதீபனின் மடியில் தவறி வீழ்ந்தது. குஞ்சைத் தூக்கித் தடவி முத்தம் கொடுத்தான். நிரூசனும் தடவினான். நிமேசிக்கா தொட்டுப் பார்த்தாள். “பஞ்சு போல் இருக்கு” என்றாள்.

ரதீபன் அப்பாவிடமும், அம்மாவிடமும் குஞ்சைக் காட்டினான். குஞ்சைக் கூட்டில் விட்டு “சின்னப் பையா குழப்படி பண்ணாமல் கூட்டுக்குள் போ” என்றான். குஞ்சு கூட்டுக்குள் போனது. பெரிய குருவிகள் முதலில் பதறின. பின் அமைதியாக இருந்தன. “உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்” என்று ரதீபனின் வாய் முணுமுணுத்தது. மகனின செயலைக் கண்டு பெற்ற மனங்கள் மகிழ்ந்தன.

❋❋❋

## ... சைக்கிளும்

...ம. காலையில் கண் விழித்தான் நிருஷன். ...லையே" என்று எண்ணினான். படுக்கையை ...ம இல்லை. போர்வையை இழுத்து மூடிக்கொண்டான். ...படுத்தான்.




அம்மா எழுந்து தன் வேலையில் ஈடுபட்டாள். அப்பா வழமை போல் அதிகாலையிலே எழுந்தார். அம்மாவுக்கு உதவியாகச் சில எடுபிடி வேலைகளைச் செய்தார். குளித்து இறைவனைத் துதித்தார். மெல்ல வெளியே வந்தார். அம்மா கொடுத்த தேநீரைக் குடித்தார்.

"வசந்தி இன்னும் நிருஷன் எழும்பல்லையோ" என்று அம்மாவிடம் அப்பா கேட்டார். அப்பாவின் குரல் கேட்டதும் நிருஷன் கண்களை இறுக்கி மூடினான். சுருண்டு படுத்துக் கொண்டான்.

"பாடசாலை இல்லை படுக்கட்டும்" என அம்மா கூறினாள். அப்பாவுக்கு சிரிப்பு வந்தது. "அப்பா நாளை பாடசாலை இல்லை. சைக்கிள் பழக வேண்டும்; பழக்கி விடணும்; நேரத்தோட எழுப்பி விடுங்க" என்று கூறியதை நினைததார். சைக்கிளை

எடுத்தார்; பழைய துணியால் துடைத்தார்; இன்று அவருக்கும் லீவு நாள். "வசந்தி பார் புதினத்தை" என்று கூறி சைக்கிள் மணியை அடித்தார்.

அப்பா வேலைக்குப் போகும்போது சைக்கிள் மணியை அடிப்பார்.



நிருஷனுக்கு இது தெரியும். மணி கேட்டதும் துள்ளி எழுந்தான். படுக்கை விரிப்பை மடித்து வைத்தான். அறையிலிருந்து யன்னல் வழியாகப் பார் த்தான். சைக்கிள் தெரிந்தது. கிணற்றடி க்கு ஓடினான்.அப்பா சிரித்துக் கொண்டே அம்மாவிடம் அந்தக் காட்சியைக் காட்டினார். காலைக் கடனை முடித்து, முகம், கை, கால் கழுவி, காற்சட்டையோடு அப்பா பக்கம் வந்தான். "அப்பா நான் ரெடி" என்றான். அப்பா கண்டும் காணாதது போல் இருந்தார்.

"வசந்தி நான் போய்வாறன்" என்று சைக்கிளை எடுப்பதுபோல் பா சாங்கு செய்தார். நிருசனுக்கு முகம் வாடியது. "அம்மா... அப்பாவைப் பாருங்க" என்று சிணுங்கினான். அம்மாவின் முகத்தைப் பார்த்தான். அம்மா புன்னகை செய்தாள். பொய் என்பது போல் சைகையும் காட்டினாள்.

நிருசனுக்கு விளங்கிவிடடது. தாவி ஓடிப்போய் அப்பாவைக் கட்டிப்பிடித்தான். அப்பாவின் கைகள் அன்போடு அவனைத் தழுவிக் கொண்டன. நிருஷன் சைக்கிளைப்

பிடித்து உருட்டினான். அது அடம்பிடித்தது போல் பக்கம் சரிந்தது. நெளிந்து, நெளிந்து சைக்கிளை நிமிர்த்தி உருட்டி னான். வீதியில் யாரும் இல்லை. வாகனப் போக்குவரத்து குறைந்த தெரு அது.

சைக்கிள் இருக்கையில் இருந்து ஹான்டிலை இரு கைகளாலும் பிடித்தான். அப்பா சைக்கிளைத் தாங்கிப் பிடித்தார். நிரூஷன் கால் கள் சைக்கிள் பெடலில் இருந்தன. "நேராகப் பார்க்க வேணும், காலால் பெடலை உழக்க வேணும்" என்றார் அப்பா. மெல்ல சைக்கிளை அப்பா தள்ளி உருட்டினார். நிரூஷன் பெடலை மிதிக்கும்போது வளைந்து, வளைந்து உழக்கினான். பெடலைத் தேட வேண்டி இருந்தது. பெடலைப் பார்த்து உழக்கினான். கைகள் உறான்டிலை இறுக்கிப் பிடித்திருந்தன. உறான்டில் வளைந்து சரிந்தது. சைக்கிள் வேலிகளில் முட்டி மோதியது.

அடிக்கடி அப்பா "நேரே பார்... நேராய் உறான்டிலைப் பிடி... உழக்கு" என்று சொல்லிக் கொண்டிருந்தார். நிரூஷனுக்குப் புதிராய் இருந்தது. தான் இருக்க தெருவும், பக்கத்திலுள்ள மரஞ்செடிகளும் ஓடுவதுபோல் இருந்தது. உற்சாகமாய் இருந்தது.

நிரூஷன் நேரே பார்த்தபடி ஹான்டிலை லாவகமாகப் பிடித்து பெடலை மிதிக்கப் பழகி விட்டான். அப்பா பின்னால் சைக்கிளைப் பிடித்தபடி ஒடி க்கொண்டிருந்தார். அப்பாவும், மகனும் சைக்கிள் பழகும் காட்சியை அம்மா பார்த்துச் சிரித்து மகிழ்ந்தார்.

அப்பாவுக்கு வெயர்த்து விட்டது. களைத்தும் விட்டார். நிரூஷன் இப்போது ஒருவாறு தனியாய் ஓடப் பழகி விட்டான். அப்பாவுக்கு திருப்தி.

நிரூஷன் நெளிந்து, நெளிந்து சைக்கிள் ஓட்டினான். இப்போது அப்பா பின்னால் தானும் ஓடுவதை நிறுத்தினார். சைக்கிள் ஓடிக்கொண் டிருந்தது. தன்னை மறந்து நிரூஷன் சைக்கிள் ஓடிக்கொண்டிருந்தான்.

அப்பா பின்னால் ஓடிவரும் சத்தத்தைக் காணவில்லை. "அப்பா..." என்று பின்னால் திரும்பினான். சைக்கிள் வீதியின் ஓரத்துக்குப்போய் வேலியில் முட்டிச் சரிந்தது. நிரூஷன் கீழே, அவனுக்குமேல் சைக்கிள். அப்பா ஓடிவந்து தூக்கி விட்டார். முழங்காலில் மட்டும் சிறு சிராய்ப்பு.

இரத்தம் கசிந்தது.

"ஏன் விழுந்தாய்" அப்பா கேட்டார்.

"உங்களை பின்னால் பார்த்தேன். காணவில்லை, பயந்து விட்டேன்" நிரூஷன் சொன்னான்.

"ஏன் என்ன பயம்"? அப்பா தான் கேட்டார்.

"நீங்க சைக்கிளைப் பிடிக்கல்ல அதுதான்..."

நிரூஷன் மெல்ல இழுத்தான்.

"நீதானே தனியே இவ்வளவு நேரமும் ஓடினாய்" அப்பா கூறி முடிக்குமுன் "தனியாய் நான் ஓடினேனா... நீங்க பின்னால வரல்லயா" அதிசயத்தோடு கேட்டான் நிரூஷன். "நீ சைக்கிளில் ஏறியபின் நான் கையை விட்டு நின்று விடுவேன்" அப்பா சொன்னார். நிரூஷனின் கண்களில் தன்னம்பிக்கை ஒளி படர்ந்தது. "உண்மையா அப்பா" என்றான். "உண்மைதான்" அப்பா சொன்னார். அவனுக்குத் துணிவு பிறந்து விட்டது. துள்ளி எழுந்து சைக்கிளைத் தள்ளினான். தத்தித் தத்தித் தாவி ஏறினான். ஏறுமட்டும் அப்பா உதவினார். அப்பா சொன்னது போல் நேரே பார்த்து, பெடலை மிதித்தான். சைக்கிள் ஓடியது. மகன் மனதில் துணிவை ஊன்றி விட்டார். தனியே ஓடுவதைக் கண்டு அப்பாவுக்கு மகிழ்ச்சி. அன்று மாலையே தனியனாக தெத்தித் தெத்தி சைக்கிளில் ஏறி ஓடப் பழகி விட்டான்.

முற்றத்தில் வட்டமடித்து மணியை அடித்து வந்து இறங்கினான். மகனைக் கட்டித் தழுவி முத்தம் தந்தாள் அம்மா. அப்பா பெருமிதம் கொண்டார். இப்போதெல்லாம் நிரூஷன் விடுமுறை நாட்களிலும் அதிகாலையிலேயே எழுந்து விடுவான்.

***
*


# விண்கலம் செய்வோம்

அப்பா கூறியபடி ரதீபன் பழைய ஈயப்பற்பசை வெற்று உறையை எடுத்து வந்தான். தம்பி நிருஷன் வெந்நீரைக் கொண்டு வந்தான். அனுசியன் தாங்கிக் கட்டையைக் காண்பித்தான். வெப்பம் ஏற்ற வசதியாய் தீயை கவின் மூட்டினான். நிசோ உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். வெந்நீரும் தயார்.

அப்பாவும் வந்து விட்டார். அப்பா ஒரு ஆசிரியர். விண்கலம் செய்வோமா? உங்களுக்கு விருப்பமா? என்று நேற்றுக் கூறியிருந்தார். இன்று ஞாயிறு. ஓய்வுநாள். செய்து பார்க்கச் சிறுவர்கள் ஆயத்தமாகினர்.

"அப்பா விண்கலம் எப்படி உந்தித் தள்ளப்படுகிறது" ரதீபன் கேட்டான்.

"அதைத்தான் செய்து பார்ப்போமே" நிருஷன் குறுக்கிட்டுக் கூறினான்.




"சரி சரி... ஈயத்தால் செய்த வெற்றுப் பற்பசை உறையை எடுங்கள்" அப்பா சொல்லுமுன் ரதீபன் உறையை எடுத்தான். அப்பா சொன்னது போல் உறைக்கு கொஞ்சம் வெப்பம் ஊட்டினான். என்ன ஆச்சரியம் அது விரியத் தொடங்கியது. அதற்குள் சிறிது கொதிநீரை விட்டான். மீண்டும் வெப்பம் ஏற்றினான். அது பற்பசை நிறைந்த உறை போல் விரிந்து வந்தது. "எப்படி உறை விரிந்தது" அப்பா கேட்டார். "வெப்பம் பெறுவதால் உறையுள் எஞ்சியிருந்த வளி, விரிவடைந்தது. அதனால் உறை சற்று விரிந்தது" நிருஷன் விடை கூறினான். அப்பா கூறியபடியே ரதீபன் பற்பசை உறையுள் அரைவாசிக்கு கொதிநீரை

ஊற்றினான். மூடியை எடுத்து இலேசாக மூடினான்.

உறையை தாங்கும் கட்டையில் சரித்து வைக்க வேண்டும். இரு தாங்குகட்டைகளை அனுசியன் தயார் செய்தான். கட்டைகள் வழுவழுப்பாக இருந்தன. ஒரு தாங்கி உயர மாகவும் இருந்தது. அவற்றை எடுத்து அளவாக வைத்தான். ரதீபன் இப்போது உறையை கட்டைகள் மேல் வைத்தான். பற்பசை உறையின் முனையில் வெப்பம் ஏற்றப்பட்டது. அனைவரும் வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டு இருந்தனர்.

"பிளாஸ்ரிக்கினால் செய்த பற்பசை உறைகள் உருகிவிடும். அது பயன்படாது." என அப்பா கூறியிருந்தார். பற்பசை உறையுள் கொதிநீர் இருந்தது. வெப்பம் ஏறியதும் அது கொதித்தது. உறையுள் நீர் கொதிப்பது தெரிந்தது. கொதிக்கும் சத்தமும் வந்தது.



"விண்கலம் புறப்படப் போகுது கவனம்" அப்பா கூறினார். உறை சற்று அசையத் தொடங்கியது. எல்லோரும் அதிசயித் தனர். "சுர்... ர்... " ஒருவித ஒலியோடு பற்பசை உறை உந்திப் பாய்ந்து சென்றது. "வாவ்..." றொக்கற்... போகுது" சத்தமிட்டுத் துள்ளினர். சற்றுத் தூரத்தே விழுந்தது. உறை வேறாகவும், மூடி வேறாகவும் கிடந்தது. அப்பாவும் பிள்ளைகளின் குதூகலத்தில் கலந்து கொண்டு துள்ளினர்.

"எப்படி றொக்கற் பாய்ந்தது. சொல்ல முடியுமா" அப்பா கேட்டார். ரதீபன் முந்திக் கொண்டான். "பற்பசை உறையுள் நீர் கொதித்துக்கொள்ள நீராவி உருவாகின்றது. நீராவியின் உந்துதலால் மூடி திறபட, அந்த விசையில் உறை பாய்ந்து சென்றது. சொல்லி முடித்தான்.


நீராவியினால் இயங்கிய இயந்திரங்கள், புகைவண்டிகள் பற்றிய படித்த பாடங்கள் மனதில் பதிந்து கொண்டன.

❋❋❋

# எங்கள் ஊஞ்சல்

பெரிய வேப்பமரம் வீட்டு முற்றத்தில் நிழல் பரப்பிக் கொண்டிருந்தது. கொத்துக் கொத்தாய் காய்களும், பழங்களுமாய் காற்றில் அசைந்து கொண்டிருந்தது. அப்பா பெரிய தேடாக்கயிறு கொண்டு வந்திருந்தார். அவரே ஏறி மரத்தின் கிளையில் ஊஞ்சல் கட்டித் தருவதாகக் கூறினார்.

ரதீபனுக்கு ஒரே குதூகலம். தம்பி நிருஷனை அழைத்தான். வேப்ப மரத்தின் கிளைகளை அண்ணார்ந்து பார்த்தான். நிருஷன் பக்கத்தில் வந்தான். நிலத்திற்குச் சமாந் தரமாகச் சென்ற கிளையைக் காட்டினான். அது சுமார் பன்னி ரண்டு அடி உயரத்தில் உறுதி யாக விசாலித்திருந்தது.



அம்மா இருவருக்கும் தேநீர் கொண்டு வந்தார். வாங்கிக் குடித்துக் கொண்டே அந்தக் கிளையை அம்மாவுக்குக் காட் டினான். “இந்தக் கிளையில் ஊஞ்சல் கட்டலாம். ஆடுவதற் இடைஞ்சல் இருக்காது. இல்லை யாம்மா? என்றான். அம்மா புன் னகையோடு “ஆமாம்” சொல்லி விட்டுப் போனார். மரத்தின் கீழே சிரமதானம் நடந்து கொண்டிரு ந்தது. ரதீபன், மண்வெட்டி, குப்பைவாரி கொண்டு நிலத்தை த் துப்பரவு செய்தான். அப்பாலு ள்ள பூஞ்செடிகளுக்குள உள்ள


களைகளை நிருஷன் பிடுங்கிக் கொண்டிருந்தான். அனுசியன், நிசோ, கவின், சனோஜன், அபிசேக் சொன்னபடியே வந்து சேர்ந்தனர். சிரமதானம் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. நிருஷன் அம்மாவிடமிருந்து தேயிலை, சீனி, தேநீர் தயாரிக்கும் பாத்திரங்களையும் எடுத்து வந்தான். சிரிப்பும், கும்மாளமும் அங்கு குடிகொண்டிருந்தது.

அனுசியனும், நிருஷனும் அடுப்பு மூட்டி தேநீர் தயாரித்தனர். நண்பர்கள் மரநிழலில் வட்டமாக ருசித்துக் குடித்தனர். அம்மாவுக்கும் ஒரு கோப்பையில் நிருஷன் எடுத்துச் சென்றான். "அம்மா இது நான் தயாரித்த தேநீர் ருசியாக இருக்கிறதா" ஆவலோடு அம்மாவைப் பார்த்தான் நிருஷன். அம்மா ஆர்வத்தோடு வாங்கி ருசித்துக் குடித்தார். ஆர்வத்தை அம்மாவின் புருவமும், கண்களும் காட்டின. "நல்ல ருசியாயிருக்கு" அம்மா சொன்னதும் நிருஷன் கைகளை விரித்து "ஹேய்...!" என்று ஆரவாரித்து பாய்ந்து சென்றான். மகனின் செயல் கண்டு அம்மாவுக்கு ஆனந்தம். மீண்டும் வேலை தொடங்கிற்று.

பலவிதமான செடிகளும், புல்பூண்டுகளுமாய் குவியத் தொடங்கின. அவற்றை எடுத்து ஆராயத் தொடங்கி விட்டனர். வண்ணத்துப்பூச்சிகள் மொய்த்துத் திரியும் முடிதும்பைச் செடி பூவும், பிஞ்சுமாய் அழகாக இருந்தது. கோரைப்புல் தொடராக கிழக்குகளோடு ஒருவித மணம் பரப்பிக் கிடந்தன. வேரைப் படரவிட்டுப் பரந்த அறுகம்புல்லையும் கண்டனர். ரதீபன் தன் கொப்பியில் படங்களையும் வரைந்து அவற்றின் பெயர்களையும் எழுதத் தொடங்கினான். நண்பர்கள் எல்லோரும் சேர்ந்து தண்டு, கிளை, பூ, இலை, காம்பு, வேர் வகைகளை கவனமாகப் பார்த்துக் குறிப்பெடுத்தனர்.

அம்மா எல்லோரையும் உணவுக்கு அழைத்தார். கிணற்றடியில் முகம் கை கால்களைக் கழுவி வந்தனர். அம்மா உணவு பரிமாறினார். உண்டபின் மீண்டும் மர நிழலுக்கு வந்தனர். அழகாக ஈர்க்குத்தடியால் கூட்டிச் சுத்தம் செய்த நிலத்தில் வேப்பமரத்தின் பழக்கோதுகளும், விதைகளும் சிந்திக் கிடந்தன. ரதீபனுக்கு கோபம் கோபமாக வந்தது. மேலே பார்த்தான் "கிக்கீக்... கீ... குக்கூ.... கா கா" என குயில், காகம், பல்வேறு பறவைகள்

ஆனந்தமாக வேப்பையிலிருந்து பழங்களை உண்டு குதூகலித்தன. ரதீபனின் கோபம் எங்கோ மறைந்து விட்டது. அவன் முகத்தில் சந்தோஷம். எல்லோரும் பறவைகளைப் பார்த்து ரசித்தனர். அப்போது சைக்கிள் மணி ஒலித்தது. நிருஷன் "அப்பா..." என்று ஓடோடிப் போனான். சைக்கிளை அப்பாவிடமிருந்து பெற்றுத் தான் உருட்டினான். வழமையாக வைக்கும் இடத்தில் வைத்தான். அப்பாவுக்கு எடுத்து வைத்த தேநீரை அம்மா கொடுத்தார். "நல்ல ருசி" என்று அப்பா சொன்னார். பிள்ளைகள் துள்ளிக் குதித்தனர்.



அப்பா, தேடாக்கயிற்றை எடுத்து மரத்தில் ஏறினார். இரண்டு காகம் அப்பாவை ஏறவிடாது பறந்து பறந்து தாக்கின. மேலே அண்ணாந்து பார்த்தார். காகத்தின் கூடு தெரிந்தது. கூடு இருக்கும் பக்க மாக ஏறாது மறு பக்கத்தால் அப்பா ஏறினார். காகங்கள் பார்த்துக்கொண்டு இருந்தன. ரதீபன் ஏற்கனவே எடுத்து வைத்திருந்த சாக்கினை அப்பா விடம் கொடுத்தான். அப்பா ஊஞ்சல் கட்டும் இடத்தில் கிளையை சாக்கினால் சுற்றிக் கட்டினார். நிருஷனுக்கு ஆச்சரியமாக இருந்தது. "ஏன் அப்பா சாக்கினால் சுற்றுகிறார்" என்று ரதீபனிடம் கேட்டான். அப்பாவே பதில் சொன்னார்.

“ஊஞ்சல் கயிறு கிளையில் காயப்படுத்தும். கயிறு இறுகி தழும்பு ஏற்படுத்தும். சாக்கினால் சுற்றிக் கட்டியபின் ஊஞ்சல் கட்டினால் மரத்திற்கும் பாதுகாப்பு, கயிற்றுக்கும் பாதுகாப்பு” என்றார். கயிற்றை இருபட்டாக எடுத்து மரக்கிளையில் சுற்றி இறுக்கினார். இரு நுனிகளையும் சம அளவாக கீழே இறக்கினார். ஊஞ்சல் பலகை இருக்குமிடத்தை அம்மா காட்டினார். நிருஷனும், அனுசியனும் தூக்கிக் கொண்டு வந்தனர்.

அப்பா இறங்கி வந்தார். கயிற்றில் பலகையை வைத்தார். சரிபார்த்தார். பலகையின் நுனியில் ஊஞ்சல் கயிற்றினால் ஒரு சுற்றுச் சுற்றி இறுக்கினார். ‘இப்போது ஆடலாம்’ என்றார். ரதீபனும், அனுசியனும் ஊஞ்சல் பலகையில் கயிற்றைப் பிடித்தபடி ஆளுக்கொரு பக்கம் நின்றனர். மற்றவர்கள் பலகையில் அமர்ந்தனர். அப்பா ஊஞ்சலை உரத்து இழுத்து ஆட்டிவிட்டார். அனுசியன் உன்னி உந்தி விட்டான். ரதீபனும் அதேபோல் செய்தான். ஊஞ்சல் ஆடியது. அப்பா ஊஞ்சல் பாட்டின் தருவை

தனதன தந்தோம் - தந்த
தனதன தந்தோம் - தந்த
தான தனாதன, தான தனாதன
தான தந்தோம்
தன தானினா


எனப் பாடினார். எல்லோர் வாயிலிருந்தும் கலகல எனச் சிரிப்பொலி உதிர்ந்தது. அம்மாவும் சேர்ந்து கொண்டார். ஊஞ்சல் ஆட்டத்தால் வேப்பை மரத்தின் கிளை ஆடியது. அதனால் மரமே தாளத்திற்கு அசைந்து கொடுத்தது. பறவைகளும் சேர்ந்து கொண்டன. காகக் கூட்டினுள்ளே இருந்த குஞ்சுகளுக்குச் சுகமாக இருந்தது. அந்த சூழல் இன்பத்தில் மிதந்து கொண்டிருந்தது.

❋❋❋
❋

## 'கீரியும், பாம்பும்'

ரதீபன் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்தான். அவனோடு தம்பி நிருஷனும் சென்றான். தூரத்தில் பெரிய கூட்டம் கூடியிருந்தது. இருவரும் எட்டிப் பார்த்தனர். வேடிக்கை யாக இருந்தது.

அந்த இடம் பாடசாலைக்குப் பக்கத்தில் இருந்தது. பாடசாலை வகுப்பறையில் புத்தகங்களை வைத்தான். பிள்ளைகள் பலர் அந்த இடத்தில் கூடி விட்டனர். அதிபரும், ஆசிரியர்களும் வந்திருந்தனர். அவர்கள் நின்றதால் பயம் நீங்கியது. உற்சாகம் பிறந்தது. எல்லோர் கண்களும் விரிந்து பார்த்துக் கொண்டிருந்தன. பாடசாலை தொடங்க இன்னும் நேரம் இருந்தது.



பெரிய கற்பாறைகள் நிலத்துள் புதைந்திருந்தன. சிறுபகுதி மட்டுமே வெளியில் தெரிந்தது. பள்ளிப்பிள்ளைகள் ஒழிந்து விளையாடும் இடம் அது. கற்பாறைகள் நடுவில் சிறிய செடிகள் இருந்தன. செடிகளுக்கிடையில் சிறு புற்றும் தெரிந்தது. கல்லில் ஏறி நின்று பார்த்தார்கள். ஆச்சரியமாக இருந்தது. கீரிகளுக்கும் பாம்புக்கும் சண்டை.

பெரிய நாகபாம்பு படமெடு த்து நின்றது. மூன்று கீரிகள் சுற்றி நின்றன. அவை நெருங் காதபடி பாம்பு சீறி எதிர்த்தது. கீரி பாயும்போது திடீரென நிலத்தில்

படுக்கும். கீரி நெருங்கும்போது படீரெனக் கொத்தும். கீரிகள் மாறி மாறிப் பாய்ந்து தாக்கின. பாம்பும் சீறி சீறித் தாக்கியது. சண்டை ஓயவில்லை. தொடர்ந்து நடந்தது.


மூன்று கீரிகளும் ஒன்றாகக் கூடின. பாம்பு மெதுவாகச் சுருண்டு நகரப் பார்த்தது. புற்றினுள் புகுந்துவிட்டால் கீரிகளால் தாக்க முடியாது. புற்று சற்றுத் தூரத்தில் இருந்தது. பாம்பு படத்தைச் சுருக்கியது. பின்னோக்கி நகர்ந்தது. கீரியொன்று விரைந்து பாய்ந்தது. கீரியின் பாய்ச்சலை எதிர்பார்த்த பாம்பு வெகுண்டு எழுந்தது. சீறிப் பாய்ந்து கொத்தியது. பாய்ந்த கீரி புற்றுப் பக்கம் நின்றது. பாம்பால் நகர முடியவில்லை. ஒரு கீரி விரைந்து ஓடி மறைந்தது. இரண்டு கீரிகள் மாறி மாறிப் பாய்ந்து சண்டையிட்டன. பாம்பைப் புற்றுக்குள் போக விடாது காவல் செய்தன. பாம்பு சீறிக் கொண்டு கீரிகளைப் பார்த்தது.

பாம்பின் உடலில் கீறல்கள் தெரிந்தன. கீறல்களில் இருந்து இரத்தம் கசிந்தது. பாம்பின் கண்கள் தீவட்டிபோல் தெரிந்தன. அதிபர் பிள்ளைகளைக் கிட்ட நெருங்காது தடுத்தார். பாம்பு பாய்ந்து வரும் என்று எச்சரித்தார். ஆசிரியர்களும் உதவினார்கள். பாடசாலை தொடங்கும் நேரம் நெருங்கியது. கீரிகள் பின்னங்கால்களை மடித்து, முன்னங்கால் களை நிலத்தில் ஊன்றி இருந்தன. பாம்பு அசையும் போது பாய்ந்து தாக்கின.

"பாம்புக்கு இரத்தம் வருகிறது" நிசோ உரத்துக் கூறினான்.
"கீரிதான் வெல்லும்" மதன் சத்தமிட்டான்.
"பாம்புதான் வெல்லும்" துஷ்யந்தன் சொன்னான்.
"பாம்பு கொத்தினால் விஷம் அல்லவா?" சிந்து கேட்டான்.
"கீரி பாம்பின் விஷம் படாமல் பாய்ந்து தாக்கும்" ரதீபன் கூறினான்.

செய்தி பரவி இப்போது கூட்டம் கூடிவிட்டது. ஆனால் அமைதியாக நின்று கீரி பாம்பு சண்டையைப் பார்த்தனர். பலர் பாம்பும், கீரியும் சண்டையிடுவதை இன்றுதான் நேரில் பார்க்கிறார்கள்.

பாம்பின் பார்வை உயர்ந்தது. திடீரென ஓடி மறைந்த கீரி வந்தது. அதன் பின்னால் இரண்டு கீரிகள் வந்தன. அதில் ஒரு கீரி சற்றுப் பெரியது. அதன் மூக்குப் பக்கம் சிவந்து அழகாயிருந்தது. மற்றக் கீரிகளை விட வித்தியாசமாயிருந்தது.



"இராசகீரி வந்திற்று. பாம்புபாடு அதோகதி" கூட்டத்திலிருந்து குரல்வந்தது. பாம்புக்கு நிலைமை புரிந்து விட்டது. தாக்குப் பிடிக்க முடியாது. விரைவாகப புற்றுக்குள் நுழைய வழி தேடியது. இராச கீரியைக் கண்டதும் புற்றுப் பக்கம் இருந்த கீரி ஓடி வந்தது. பாம்பு எதிர்பாராத நேரத்தில் பின்பக்கமாக நகர்ந்தது. புற்றின் வாசலுக்கு வந்து விட்டது. புற்றுக்குள் நுழைவதற்குள் கீரிகள் உசாராகி விட்டன. ஒரே நேரத்தில் பாய்ந்தன. பாம்பைச் சுற்றி வளைத்து விட்டன. இராச கீரி தன்னை ஆயத்தப்படுத்தியது.

பாம்பு உயர்ந்து படமெடுத்துச் சீறியது. அதேவேளை தன் வாலை புற்றினுள் திணித்து விட்டது. இராசகீரி பாய ஆயத்தமாகியது. இராசகீரி பாய்ந்தால் தப்புவது கஷ்ரம். அதன் குறி தவறாதாம். தவறினால் அடுத்த குறியில் பாம்பு இரண்டு

துண்டாகிவிடும்.

"சேர் பாம்பு விஷம் கீரிக்கு ஒன்றும் செய்யாதோ" ரதீபன் அதிபரைக் கேட்டான்.

"கீரியின் உடல் பாம்பின் விஷத்தை எதிர்க்கும் சக்தி கொண்டது. அதனால் கீரிக்கு ஒன்றுமாவாது" என எல்லோருக்கும் கேட்கும்படி கூறினார்.



இராசகீரி முன்னோக்கிப் பதுங்கியது. பாம்பு இப்போது கீரியை எதிர்க்கப்படமெடுத்து உயர்ந்து சீறியது. பாம்பைக் குறிவைத்து மெதுவாக முன்னோடியது. பாம்பு சமாளிப்பதற்கு ஆயத்தமாகியது. அது பல கீரிகளோடு சண்டை யிட்டு அனுபவம் கொண்டது. முதல் பாய்ச்சலில் வெற்றி கிடைக்காது என்பது பாம்புக்கு தெரியும். முதல் பாய்ச்சல், அடுத்த பாய்ச்சலுக்கு ஒரு பயிற்சியாகும்.

"கீரியின் உடற்கலங்கள் பாம்பின் விஷத்தை எதிர்க்கும் சக்தி கொண்டமைந்துள்ளன. என இஸ்ரேலிய டாக்டர்கள் நிறுவியுள்ளனர்" என விஞ்ஞான ஆசிரியர் தவபாலன் மேல் வகுப்பு மாணவர்களுக்கு விளக்கினார். ரதீபனுக்கும் விளங்கியது.

“சேர் பாம்பின் விஷத்தை எடுத்து பாம்புக்கடிக்கு வைத்தியம் செய்கிறார்களாம். பத்திரிகையில் படித்தேன்” உயர்தர வகுப்பு மாணவன் சேகர் கூறினான்.

“அதற்காகப் பாம்புகளை வளர்க்கும் பண்ணைகளும் உண்டாம்” நிருஸ் சொன்னான்.

“அங்கே பாருங்கள்” ரதீபன் சுட்டிக்காட்டினான். பதுங்கி ஓடிய இராசகீரி பாய்ந்தது. உயரமாகப் படமெடுத்த பாம்பின் தலையை நறுக்கவே குறிபார்த்தது. சடாரெனப் பாம்பு தலையை நிலத்தோடு பதித்துக்கொண்டது. இராசகீரி குறிதவறி அப்பால்போய் குதித்தது. மற்றக் கீரிகள் பாயுமுன் பாம்பு புற்றுள் புகுந்து ஒளிந்து கொண்டது.

கீரிகள் ஒன்றையொன்று பார்த்தன. பெரும் ஏமாற்றம் முகத்தில் தெரிந்தது. புற்றைச் சுற்றிச் சுற்றி வந்தன. மோப்பம் பிடித்துப் பார்த்தன. பயனில்லை என்பதைப் புரிந்து கொண்டன. வந்தவழியே சென்றன. இராசகீரி நடுவில் செல்ல, முன்னால் ஒரு கீரியும், பின்னால் ஒரு கிரியும் இருபக்கத்திலும் மற்றக் கீரிகளும் சென்றன. அந்த அழகுக் காட்சியை அதிபர் காட்டினார். அதிபர் தலைமையில் ஆசிரியர், மாணவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்து வகுப்பிற்குச் சென்றனர். பாடசாலை தொடங்கும் மணி ஒலித்தது. பாடசாலை தொடங்கிற்று.

❋❋❋
❋

## இந்நூலாசிரியர்.........

திரு.ச.அருளானந்தம் அவர்கள் இளஞ்சிறார்களின் கல்வி அபிவிருத்தியில் கரிசனை உடையவர். ஆரம்பக் கல்வி அடிப்படையானது. அது உறுதியாக அமைந்தாற்தான் உயர்கல்வி உறுதியடையும். இதற்கு உசாத்துணை நூல்கள் அதிகம் தேவை. சிறார்கள் வாசிக்கவும், எழுதவும் ஆற்றலுடையவர்களாக வேண்டும். அதற் கேற்றவாறு திரு.ச.அருளானந்தம் அவர்கள் பாடல் களையும் கதைகளையும் எழுதி வருகிறார்.

இவர் ஆசிரியராக, அதிபராக, கல்விப்பணிப்பாளராக உயர்ந்தவர். சிறந்த கவிஞரும், சிறுகதை எழுத்தாளருமாவார். கேணிப்பித்தன், ஆலன் எனும் புனைபெயர்களில் எழுதுபவர். நாடகத்துறையில் பரிட்சயம் உடையவர். பாடசாலை மாணவர்களுக்காகப் பல நாடகங்களை எழுதி, நெறிப்படுத்தி வெற்றிகண்டவர். இவரது ஆக்கங்கள் யாவும் நூலுருப் பெறவேண்டும். இதற்கு எல்லோரும் உதவ முன்வரவேண்டும்.

திருக்கோணமலை மாவட்டத்தில் சிறுவர் இலக்கியத்திற்கென தன்னை ஈடுபடுத்தி எழுதிவரும் இவர் ஆரம்பக் கல்வியில் நாட்டமுடையவர். சிறுவர்கள் படித்து மகிழும் வண்ணம் எழுதும் இவர் பல ஆக்கங்களைத் தரவேண்டும் என்று வாழ்துகிறேன்.

ஆ.குணராஜரெட்ணம்
பிரதேச கல்விப்பணிப்பாளர்
பிரதேச கல்வி அலுவலகம்
மூதூர்